**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -
# BEFORE THE MAHILA COURT MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124/2023** |
| **Deposition of witness for** | : | **PW : 7** |
| **Name** | : | திரு. சின்ராஜ் |
| **Father's / Husband's Name** | : | கிருஷ்ணன் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**14.07.2026**

2, 3 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் திருப்பரங்குன்றம் துர்கா காலனியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகளின் மகனை எனக்கு தெரியும். அவர் பெயர் ராஜா. ஆஜர் எதிரிகளின் மகன் ராஜாவுக்கும், தேன்மொழிக்கும் 2019ம் வருடம் செக்காணுரணி ஆதி சிவன் கோவிலில் திருமணம் நடந்தது. திருமணத்தில் நான் கலந்து கொண்டேன். 13 பவுன் நகை மற்றும், கட்டில், பீரோ மெத்தை உள்ளிட்டவை இரட்டை சீர் கொடுக்கப்பட்டது. நான் காய்கறி வியாபாரம் பார்க்கிறேன். அடிக்கடி தேன்மொழியை போய் பார்ப்பேன். பணம் தேவைப்படுவதாகவும் தொழில் செய்ய அப்பாவிடம் பணம் வாங்கி கொண்டு கொடுக்கும்படியும் ராஜா கேட்டதாக தேன்மொழி என்னிடம் சொன்னார். எவ்வளவு பணம் என்று சொல்லவில்லை. இது பற்றி என் அண்ணனிடம் சொன்னதற்கு என் அண்ணன் போய் தேன்மொழியை அடிக்கடி பார்த்து

வந்துள்ளார். இரண்டு மூன்று முறை என் அண்ணனிடம் தேன்மொழி எனது கணவர் பணம் கேட்பதாக சொல்லியுள்ளார். இது குறித்து ஒரு முறை நானும், எனது அ ப்பாவும், எனது சித்தப்பாவும் எதிரிகளிடம் போய் சத்தம் போட்டோம். குடும்ப பிரச்சினை தானே சரிக்கட்டி விடுவோம் என்று சொல்லிவிட்டு வந்தோம். இந்நிலையில் 13.07.2021ம் தேதி இரவு 9.00 மணியளவில் என் அண்ணன் மாரிமுத்து போன் செய்து தேன்மொழி இறந்து விட்டதாக சொன்னார். அங்கு ஏ தோ பிரச்சினையாம். அங்கு போய் பாரு என்று என்னிடம் சொன்னார். அன்று இரவு 10.30 மணி வாக்கில் நான் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு போய் பார்த்தேன். தேன்மொழி கருகிய நிலையில் இருந்தார். எதிரி பஞ்சவர்ணம் வெளியில் இருந்தார். என் அண்ணி இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

தேன்மொழி அவரது கணவர் வியாபரரத்திற்காக பணம் கேட்டதாக என்னிடம் சொன்னதாக நான் காவல்துறை விசாரணையில் குறிப்பிட்டு எதுவும் சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் பணம் கேட்டதாக சொன்னார் என சொன்னேன். தொழில் ரீதியாக என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. தேன்மொழி அவரது கணவர் பணம் கேட்டதாக என்னிடம் சொன்னதாக தேன்மொழியின் தகப்பனாரிடம் சொன்னதாக காவல்துறை விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் அவ்வாறு எனது அண்ணனிடம் சொன்னேன். பணம் கேட்ட விபரம் என் சித்தப்பா அ.சா.6க்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். எதிரி பணம் கேட்ட விஷயத்தை பற்றி குடும்பத்தினர்கள் எல்லோரும் பேசினோமா என்று கேட்டால் பேசினோம். அது குறித்து எந்த தேதி பஞ்சாயத்து நடந்தது என்று கேட்டால் தேதி ஞாபகம் இல்லை. 2020ல் பஞ்சாயத்து நடந்தது. அதில் பணம் கேட்டது பற்றி பஞ்சாயத்து பேசப்பட்டது. புகார் கொடுப்பதற்கு உடன் போனேன். காவல்நிலையத்தில் வெளியில் இருந்ததாக சாட்சி கூறுகிறார். புகாரை நான் படித்துப் பார்க்கவில்லை. போலீசார்

சாட்சிகளை விசாரித்த போது உடன் இருந்தேன். பணம் கேட்ட விபரத்தை பற்றி போலீசாரிடம் மற்ற சாட்சிகள் சொன்னார்களா என்று எனக்கு தெரியாது. தேன்மொழி உயிருடன் இல்லை என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொனனால் அது சரியல்ல. எதிரிகள் எவரும் தேன்மொழியிடம் பணம் கேட்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ.) ,
மகளிர் நீதிமன்றம்,மதுரை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# BEFORE THE MAHILA COURT MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124/2023** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | **திரு. கணேசன்** |
| **Father's / Husband's Name** | : | அழகர் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.07.2026**

2, 3 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் வேடசந்துாரில் பழனி ரோட்டில் வாய்க்கால் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் பாத்திரம் வியாபாரம் செய்து வருகிறேன். மாரிமுத்து என் அண்ணன் மகன். மாரிமுத்துவுக்கு தேன்மொழி என்ற மகாலட்சுமி, தீபிகா என்ற இரண்டு மகள்கள் உள்ளனர். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி சிவாவின் மகனுக்கு தேன்மொழியை சுமார் 7 வருடத்திற்கு முன்பு திருமணம் செய்து கொடுத்தார்கள். திருமணத்தின் போது தேன்மொழிக்கு 13 பவுன் நகை அவரது தகப்பனார் போட்டார். ராஜா, அவருடைய அப்பா, அவருடைய அம்மா தோடு கேட்டார்கள். நகை, நட்டு வாங்கி வரும்படி தேன்மொழியிடம் சொன்னார்கள். தேன்மொழி என் மகனிடம் அடிக்கடி போன் போட்டு எதிரிகள் மேற்படி நகை

கேட்டதாக சொன்னார். அது பற்றி ஓயாமல் பஞ்சாயத்து நடந்தது. நானும் என் மகனும் சின்னப்பொன்னு, முருகன் ஆகியோரிடம் பஞ்சாயத்து செய்தோம். அப்போது தேன்மொழி 7 மாதமாக இருந்தார். பஞ்சாயத்தில் 2 வாரம் ஆகட்டும் சீர் செய்து தருகிறேன் என்று சொன்னேன். தேன்மொழியின் மாமியார் மருத்துவமனையில் இருந்து போன் சீமண்ணை ஊற்றி எரிந்துவிட்டார்கள் என்று சொன்னார். பின்னர் எரிந்துகொண்டது என்று சொன்னதாக சாட்சி கூறுகிறார். பின்னர் மதுரை பெரிய ஆஸ்பத்திரி போய் பார்த்தோம். தேன்மொழி மூஞ்சி, முகரை எரிந்து கரிக்கட்டையாக கிடந்தார். இது சம்பந்தமாக என் மருமகள் அமுதா புகார் கொடுத்தார். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

தேன்மொழி இறந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. கணவன், மனைவிக்குள் ஏற்பட்ட பிரச்சனை பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. நகை கேட்டதாக போனில் தேன்மொழி சொன்னார். என்னிடம் நேரடியாக கேட்கவில்லை. அது பற்றி மகனும் என்னிடம் சொன்னார் என சாட்சி கூறுகிறார். சின்னப்பொன்னு, முருகன் ஆகியோரை கூட்டிசென்று பஞ்சாயத்து நடத்தியதாக போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. போலீசார் சமாதானமாக போகும்படி சொன்னார்கள். எந்த வருடம் பஞ்சாயத்து நடந்து என்று கேட்டால் இன்றிலிருந்து 4 வருடத்திற்கு முன்பு நடந்தது. வருடம் ஞாபகம் இல்லை. வீட்டின் உரிமையாளரை நான் பார்த்துள்ளேனா என்று கேட்டால் இன்று தான் பார்த்தேன். இதற்கு முன்பு பார்த்ததில்லை. பார்வதியுடன் தேன்மொழி சண்டை போட்டதாக கூறப்படும் விபரம் பற்றி நேரடியாக தெரியாது. அமுதா புகார் கொடுத்த விபரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. பிறகு தான் காவல்நிலையம் போனேன்.

கணவன், மனைவி இடையேயான பிரச்சினை சம்பந்தமாக காவல்நிலையத்தில் ஏற்கனவே புகார் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் எனக்கு எதுவும் தெரியாது. தேன்மொழி என் அண்ணன் மகள் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் நகை எதுவும் கேட்டு என் அண்ணன் மகளிடம் பிரச்சினை எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வதிக்கும் தேன்மொழிக்கும் ஏற்பட்ட பிரச்சினையில் தேன்மொழி இறந்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ.) ,
மகளிர் நீதிமன்றம்,மதுரை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# BEFORE THE MAHILA COURT MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 124/2023** |
| **Deposition of witness for** | **:** | **PW : 5** |
| **Name** | **:** | **திரு. கணேசன்** |
| **Father's / Husband's Name** | **:** | மாயி |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**14.07.**2026

2, 3 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை முத்துப்பட்டி ஆர்.எம்.எஸ் காலனியில் அழகுமலையான் நகரில் பிளாட் எண்.47ல் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகளின் மகன் பெயர் ராஜா. மேற்படி ராஜாவும் அவரது அம்மா, அப்பாவும் ராஜாவின் மனைவி தேன்மொழியும் என்னுடைய வீட்டின் கீழ்பகுதியில் வாடகைக்கு இருந்தனர். நாங்கள் மாடியில் வசித்து வந்தோம். 2019ம் வருடம் ராஜாவுக்கும், தேன்மொழிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு அவர்கள் நன்றாக வசித்து வந்தார்கள். தேன்மொழிக்கு 9 மாத கைக்குழந்தை இருந்தது. 13,07,2021ம் தேதி நான் கொத்தனார் வேலைக்கு போய்விட்டு இரவு 7.00 மணிக்கு வந்தேன். அப்போது எங்கள் தெரு

முனையில் 3ம் எதிரி பஞ்சவர்ணம் இருந்தார். என் மருமகளை பார்த்தீர்களா என்று என்னிடம் கேட்டார். நான் வேலைக்கு போய்விட்டேன் பார்க்கவில்லை என்று சொன்னேன். பஞ்சவர்ணத்தின் மருமகன் சுந்தர் என்பவர் வந்து தேன்மொழி பார்வதி வீட்டில் இருப்பதாக சொன்னார். இரவு – 7.30 மணியளவில் நானும், சுந்தரும் பார்வதி வீட்டிற்கு போனோம். நாங்கள் போனபோது பார்வதி தேன்மொழியை பார்த்து பொய் பேசாதே என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். உன் மாமியார் வரட்டும் என்று பார்வதி சொன்னார். அதற்கு தேன்மொழி பொய் தான் சொன்னேன் என சொன்னார். பிறகு நாங்கள் வீட்டிற்கு வந்து விட்டோம். நான் வீட்டின் மாடியில் சோறு சாப்பிட்டு கொண்டிருந்த போது இரவு 8.15 – 8.30 மணியளவில்கீழ் வீட்டின் வெளியே இருந்து பஞ்சவர்ணம், சிவம், அலறிக் கொண்டு வீட்டிற்குள் சென்றார். நான் மாடியில் இருந்து இறங்கி கீழ் வீட்டின் முன் நின்றிருந்தேன். சிவம், சுந்தர், ராஜா ஆகியோர்கள் தேன்மொழியை கைத்தாங்கலாக தூக்கி வந்தார்கள். தேன்மொழியின் மூஞ்சி மற்றும் உடலில் தீக்காயம் இருந்தது. மேற்படி மூவரும் தேன்மொழியை ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்றதாக அழைத்துச் சென்றார்கள். ஆஸ்பத்திரியில் அவர் இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் அவர்களுடன் ஆஸ்பத்திரிக்கு போகவில்லை. தேன்மொழியின் தாயார் புகார் கொடுத்ததாக சொன்னார்கள். வேறு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக கருத அரசு தரப்பில் கோரிக்கை விடப்பட்டு ஏற்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)

திருமணம் நாளிலிருந்து கணவன், மனைவி இருவரும் அடிக்கடி சண்டை போட்டதாக காவல்துறையில் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சண்டை போட்டார்கள் என்று சொன்னேன். அடிக்கடி சண்டை போட்டதாக சொல்லவில்லை. அந்த சண்டை குடும்ப சண்டை

என்று சாட்சி கூறுகிறார். தேன்மொழி என்ற மகாலட்சுமி மண்ணெண்ணை தீ வைத்து கொண்டு எரிந்த நிலையில் கிடந்தார் என்று காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் சென்று பார்த்த போது மண்ணென்னை ஊற்றி தீ வைத்துக் எரிந்த நிலையில் கிடந்தார் என காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். (வீட்டின் வெளியில் இருந்து பார்த்ததாக சாட்சி மீண்டும் கூறுகிறார்.)

நீதிமன்ற கேள்வி:

தேன்மொழியை யாராவது துன்புறுத்திய காவல் துறையினரிடம் எதுவும் சொன்னீர்களா?

பதில்: நான் யாரும் துன்புறுத்தியதாக காவல் துறையினரிடம் சொல்லவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

தேன்மொழிக்கும் அவரது கணவருக்கும் பெருத்த அளவில் சண்டை ஏற்படவில்லை என்று சொன்னால் ஏற்படவில்லை. தேன்மொழிக்கும், அவரது கணவருக்கும் இடையே சண்டை சம்பந்தமாக வெளி ஆட்கள் பஞ்சாயத்து எதுவும் செய்தார்களா என்று பஞ்சாயத்து எதுவும் செய்யவில்லை. நகை கேட்டு தேன்மொழிக்கும் அவரது கணவருக்கும் இடையே சண்டை எதுவும் நடைபெற்றதாக என்று கேட்டால் சண்டை எதுவும் அவ்வாறு நடைபெறவில்லை. பார்வதிக்கும் இறந்து போன தேன்மொழிக்கும் பிரச்சனை ஏற்பட்டு அதன் பிறகு தான் தேன்மொழி இறந்து போனார். தேன்மொழி இறப்பதற்கு முன்தைய தினம்

தேன்மொழிக்கோ, எதிரிகளுக்கோ பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் ஏற்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மகளிர் நீதிமன்றம்,மதுரை.

Crl. Misc. 39